ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302

# யுகங்களில் தேவனுடைய திட்டம் பெரிய, சிறிய உடன்படிக்கைகள் (தொடர்ச்சி)

**முன்னுரை :**

பாடம் 33–ல், தேவன் மனிதனோடு ஏற்படுத்திய உடன்படிக்கைகளையும், அதன் அர்த்தத்தையும் உங்களுக்கு அறிமுகப்படுத்த நாங்கள் முயற்சி செய்திருக்கிறோம். காலங்களுக்கு ஏற்றாற்போல இந்த உடன்படிக்கைகள் எவ்விதத்தில் தொடர்புடையதாக இருக்கிறது என்பதை காண்பித்துள்ளோம். எட்டு உடன்படிக்கைகளின் முக்கிய நோக்கத்தையும், அவைகளின் சிறப்பியல்புகளையும் தெளிவாக விளக்கியுள்ளோம். இந்தப் பாடத்தைத் தெளிவாக அறிந்துகொள்வதற்கு அநேக வேதவசனங்களைப் படிக்கவேண்டும். பாடம் 33–ல் ஐந்து உடன்படிக்கைகளைக் குறித்துப் பார்த்துள்ளோம். இப்பாடத்தில் மூன்று உடன்படிக்கைகளை அதாவது பாலஸ்தீனா உடன்படிக்கை, தாவீது உடன்படிக்கை, புதிய உடன்படிக்கை இவைகளைப் பார்க்கப்போகிறோம்.

## இப்பாடத்தின் முக்கியத்துவம் :

உடன்படிக்கைகளைக் குறித்துத் தெளிவான அறிவு இல்லாத பட்சத்தில் வேதாகமத்தைக் குறித்து முழுமையாக அறிந்துகொள்ள முடியாது. தேவனுடைய நித்தியத் திட்டங்களையும், நோக்கங்களையும் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம். தேவனுடைய சித்தத்தை முழுமையாக அறிந்துகொள்ள அவர்தாமே உங்களுக்கு ஞானத்தைக் கொடுப்பாராக.

**பாலஸ்தீனா உடன்படிக்கை :**

**I. அமைப்பு :**

பாலஸ்தீனா தேசம் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமாகும். ஆபிரகாமின் சந்ததி இத்தேசத்தை சுதந்தரிக்குமுன் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். மேலும் புறஜாதியார் இத்தேசத்தில் குடியிருந்து வந்தார்கள். கேட்பதற்கு அநேக கேள்விகள் இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் இருந்தது.

அ. இன்னும் பாலஸ்தீனா தேசம் புறஜாதியாருடையது தானா?

ஆ. நிபந்தனையுள்ள மோசேயின் உடன்படிக்கையானது நிபந்தனையற்ற பாலஸ்தீனா உடன்படிக்கையை ஒதுக்கி வைக்கிறதா?

இ. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு எதிர்ப்புகள் ஒரு தடையாக இருக்குமா?

**II. தேவனின் உறுதிமொழி :**

உபாகமம் 30:1–10. இதுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமாகிய பாலஸ்தீனா உடன்படிக்கை. இங்கே தேவன் தமது வாக்குறுதியை உறுதிப்படுத்தி எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கொடுக்கிறார்.

**III. இந்த உடன்படிக்கையின் முக்கியத்துவம் :**

அ. இத்தேசத்திற்கு இஸ்ரவேல் என்ற பெயரை உறுதிப்படுத்துகிறது. ஜனங்களின் உண்மையற்ற தன்மை, அவநம்பிக்கை ஆகிய இவைகள் இந்த உடன்படிக்கையை ரத்து செய்வதில்லை.

ஆ. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் இவர்கள் வாழ்ந்தாலும், ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையிலிருந்து விலக்கப்படவில்லை (கலாத்தியர் 3:17; ஆதியாகமம் 13, 15).

இ. இந்த உடன்படிக்கையானது ஆபிரகாமின் உடன்படிக்கையை உறுதிப்படுத்துவதாகவும், விரிவுபடுத்துவதாகவும் இருக்கிறது. ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையானது நிபந்தனையற்றதும், நிறைவேற்றப்படுகிறதாகவும் இருக்கிறது. கீழ்ப்படியாமை,அவநம்பிக்கை இவைகளினாலே இந்த உடன்படிக்கையானது விலக்கப்படுவதில்லை. ஆபிரகாமின் உடன்படிக்கையானது எந்த ஒரு நிபந்தனையும் இல்லாமல் நிறைவேற்றப்படுகிறதாகவே உள்ளது.

## IV. இந்த உடன்படிக்கையில் அடங்கியவை :

அ. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் உண்மையற்றவர்களாகக் காணப்படும் பொழுது அத்தேசத்திலிருந்து நீக்கப்படுவார்கள் (உபாகமம் 28:63–68; 30:1–3).

ஆ. வருங்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரிடத்திற்குத் திரும்புவார்கள் (உபாகமம் 28:63; 30:1).

இ. அவர்களது மேசியா மறுபடியும் வருவார் (உபாகமம் 30:3–6).

ஈ. இஸ்ரவேல் ஜனங்கள் மறுபடியும் தங்களுடைய தேசத்திலே கூட்டிச்சேர்க்கப்படுவார்கள் (உபாகமம் 30:5).

உ. இஸ்ரவேல் ஜனங்கள் முழுவதும் கர்த்தரிடம் திரும்புவார்கள் (உபாகமம் 30:4–8; ரோமர் 11:26, 27; அப்போஸ்தலர் 15:14–16).

ஊ. இஸ்ரவேல் நாட்டிற்கு விரோதமாக எழும்பிய அனைத்து நாடுகளும் நியாயந்தீர்க்கப்படும் (உபாகமம் 30:7).

எ. இஸ்ரவேல் ஜனங்கள் தங்களது தேவனாகிய கர்த்தரிடத்திலிருந்து முழுப்பலன்களை பெறுவார்கள் (உபாகமம் 30:9).

<u>குறிப்பு :</u> இஸ்ரவேல் ஜனங்களுக்கும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கும் உள்ள தொடர்பில் தேவன் முக்கியப்படுத்திச் சொல்லக்கூடிய காரியம் என்ன என்பதை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

## V. இந்த உடன்படிக்கை மறுபடியும் உறுதிப்படுத்தப்பட்டது :

எசேக்கியேல் 16:1–62. தேவன் இந்த உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கை என்று அழைக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் நிரந்தரமாக தேவனால் புறக்கணிக்கப்படவில்லை என்று இவ்வேதபகுதி நமக்கு தெளிவாகக் காட்டுகிறது.

## VI. இந்த உடன்படிக்கையின் தன்மை :

அ. இந்த உடன்படிக்கை நிபந்தனையற்றது.

ஆ. இந்த உடன்படிக்கை நித்தியமானது (எசேக்கியேல் 16:60).

இ. இந்த உடன்படிக்கையானது நிபந்தனையற்ற ஆபிரகாமின் உடன்படிக்கையின் விஸ்தரிப்பு ஆகும்.

ஈ. இஸ்ரவேல் ஜனங்களின் மனந்திரும்புதலே இந்த உடன்படிக்கை நிறைவேறுதலுக்கு ஆதாரமாக அமைகிறது. தேவன் அவர்களின் மனந்திரும்புதலுக்கு உத்தரவாதம் கொடுத்திருக்கிறார் (ரோமர் 11:26,27; ஓசியா 2:14–23; உபாகமம் 30:6; எசேக்கியேல் 11:16–21). இது வல்லமையுள்ள பிதாவின் செயலாகும்.

உ. இந்த உடன்படிக்கையில் ஒரு பகுதி உண்மையாகவே நிறைவேறிவிட்டது.

ஊ. உபாகமம் 30:1–3 வசனங்களில் ‘‘உன்மேல் வரும்போது’’, ‘‘எல்லா ஜாதிகளிடத்திலும் போயிருக்கும்போது’’, இந்த வார்த்தைகள் காலத்தைக் குறிப்பதேயல்லாமல் உடன்படிக்கை முழுவதையும் கட்டுப்படுத்துவதில்லை.

## VII. இந்த உடன்படிக்கை எதிர்கால சம்பவங்களை சம்பந்தப்படுத்துகிறது :

அ. இஸ்ரவேல் ஜனங்கள் முழுவதும் மனந்திரும்ப வேண்டும்.

ஆ. இஸ்ரவேல் ஜனங்கள் அனைவரும் கூட்டிச்சேர்க்கப்பட வேண்டும்.

இ. இஸ்ரவேல் ஒரு நாடாக நிறுவப்படவேண்டும்.

ஈ. இஸ்ரவேல் ஜனங்கள் தங்களின் தேசத்தை நிரந்தரமாக சுதந்தரித்துக்கொள்ள வேண்டும்.

உ. இஸ்ரவேல் நாட்டைப் பகைத்த அனைத்து நாடுகளுக்கு வரும் நியாயத்தீர்ப்பை சாட்சி பகரவேண்டும்.

ஊ. இஸ்ரவேல் ஜனங்கள் இந்த உலகப்பிரகாரமான நிலையில் ஆசீர்வதிக்கப்பட வேண்டும்.

எ. இவைகள் அனைத்தும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. எனவே இவைகள் அனைத்தையும் தீர்க்கதரிசனங் களாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஏ. அனைத்து தீர்க்கதரிசிகளாலும் இக்காரியம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது (ஏசாயா 11:11,12; 14:1–3; 27:12,13; 49:8–16; 66:20–22; எரேமியா 16:14–16; 23:3–8; 30:10,11; 31:8; 31:31–39; எசேக்கியேல் 11:17–21; 20:33–38; 34:11–16; 39:25–29; ஓசியா 3:17–21; ஆமோஸ் 9:11–15; மீகா 4:4–7; செப்பனியா 3:14–20; சகரியா 8:4–8).

# தாவீதின் உடன்படிக்கை :

## I. தாவீதின் உடன்படிக்கை எங்கே காணப்படுகிறது?

2 சாமுவேல் 7:8–17

## II. இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது எப்பொழுது?

தாவீது இஸ்ரவேல் ராஜாவாக இருக்கும்பொழுது இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

## III. இந்த உடன்படிக்கை யாருடன் ஏற்படுத்தப்பட்டது?

இந்த உடன்படிக்கையானது தாவீதோடும், அவருடைய குடும்பத்தாரோடும் ஏற்படுத்தப்பட்டது.

## IV. இந்த உடன்படிக்கையின் பிரதான நோக்கம் என்ன?

1. தாவீதின் குடும்பம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்படியாக இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. கிறிஸ்துவில் இது நிறைவேறிற்று (மத்தேயு 1:11; லூக்கா 1:33).
2. தாவீதின் இராஜ்ஜியம் இஸ்ரவேலிலும், இந்த உலகமுழுவதிலும் நிலைத்திருக்கும்படியாக ஏற்படுத்தப்பட்டது (கிறிஸ்துவில் நிறைவேறும் அப்போஸ்தலர் 15:14–17).

## V. இந்த உடன்படிக்கையில் குறிப்பாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது என்ன?

அ. ஒரு நிரந்தரமான வீடு (2 சாமுவேல் 7:16). இது தாவீதின் வம்சத்தைக் குறிக்கிறது. தாவீதின் சந்ததி என்றைக்கும் நிலைத்திருக்கும்.

ஆ. ஒரு நித்தியமான சிங்காசனம் (2 சாமுவேல் 7:16). இது தாவீது ஆட்சி செய்வதற்கான அதிகாரத்தை குறிக்கிறது. இவ்வுரிமை தாவீதினிடத்திலிருந்தும், அவருடைய சந்ததியினிடத்திலிருந்தும், எப்பொழுதும் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

இ. ஒரு நித்திய இராஜ்ஜியம் (2 சாமுவேல் 7:16). இது பூமியில் ஏற்படுத்தப்படுகிற இராஜ்ஜியத்தைக் குறிக்கிறது. தாவீது, சாலொமோன் மற்றும் தீர்க்கதரிசிகள் அனைவரும் இதைப் புரிந்து கொண்டவர்களாக இருந்தார்கள்.

ஈ. இந்த உடன்படிக்கை இவ்விதமாக நிச்சயமாக நிறைவேறும்.

## VI. எதிர்நோக்க வேண்டிய பிரச்சனைகள் யாவை?

அ. இந்த வாக்குத்தத்தங்கள் எழுத்தின்படி நிறைவேறுமா?

ஆ. இந்த வாக்குத்தத்தங்களை ஆவிக்குரியவைகளாக பாவித்து கீழ்க்கண்டவாறு சொல்லலாமா?

1. இராஜ்ஜியம் என்பது சபை.
2. வீடு என்பது விசுவாசத்தின் வீடு அல்லது அனைத்து விசுவாசிகள்.
3. சிங்காசனம் என்பது பிதாவின் சிங்காசனம். கிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

இ. வரலாற்று ரீதியில் சாலொமோனுக்குள் எல்லாமே நிறைவேறிவிட்டதா?

ஈ. இஸ்ரவேல் நாடு வருங்காலத்தில் ராஜாவையும், இராஜ்ஜியத்தையும் உடையதாகக் காணப்படுமா?

உ. இராஜ்ஜியம் என்பது நிகழ்காலத்திலா அல்லது எதிர்காலத்திலா?

ஊ. இந்த வாக்குத்தத்தங்களை கிறிஸ்து எப்பொழுது, எப்படி நிறைவேற்றுவார்?

எ. வரலாற்று ரீதியில் ஒரு முழுமையான நிறைவேறுதல் இருக்கிறதா?

## VII. சாலொமோன், அவருடைய சந்ததியார்களின் பிரச்சனை (2 சாமுவேல் 7:12–14).

அ. உன் சந்ததியை எழும்பப்பண்ணுவேன் (2 சாமுவேல் 7:12) நிறைவேறிற்று.

ஆ. அவன் இராஜ்ஜியத்தை நிலைப்படுத்துவேன் (வசனம் 12) நிறைவேறிற்று.

இ. அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான் (வசனம் 13) நிறைவேறிற்று.

ஈ. அவன் இராஜ்ஜியபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன் (வசனம் 13) இது அவருடைய ராஜரீக உரிமையைக் குறிக்கிறது.

உ. <u>குறிப்பு :</u> சாலொமோனின் வீட்டைக் குறித்தோ அல்லது சந்ததியைக் குறித்தோ சொல்லப்படவில்லை.

1. வியப்படையக்கூடிய மாறாத, சரியான தீர்க்கதரிசனம் இங்கே இருக்கிறது.
2. சாலொமோனின் சிங்காசனமும், அதிகாரமும் தொடர்ந்திருக்கிறது.
3. கோனியா ராஜாவோடு சாலொமோனின் வீடு முடிந்துவிட்டது (எரேமியா 22:28–30).
4. கிறிஸ்து மரியாளினிடத்தில் பிறந்தார். மரியாள் சாலொமோனின் வம்சத்தில் வந்தவள் அல்ல. நாத்தான் மூலமாக தாவீதின் வம்சத்தில் வந்தவள். சட்டப்படி யோசேப்பு சாலொமோன் மூலமாக தாவீதின் வம்சத்தில் வந்தவர். இதுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சிங்காசனத்திற்கான அதிகாரத்தையும், தாவீதின் சந்ததி தொடர்ந்திருக்கும் என்கிற உத்திரவாதத்தையும் கிறிஸ்துவுக்குக் கொடுத்துள்ளது.

ஊ. எனவே, இந்த உடன்படிக்கை சாலொமோனில் நிறைவேறவில்லை.

## VIII. ஆயிரம்வருட அரசாட்சி இல்லை என்று சொல்பவர்களின் வாக்குவாதங்கள் :

அ. தாவீதின் உடன்படிக்கையானது நிபந்தனையானது, தற்காலிகமானது. மேலும் இப்பூமிக்குரியதாக காணப்படுகிறது என்று இவர்கள் கருதுகிறார்கள்.

**பதில் :** வேதவசனம் இதற்கு முற்றிலும் எதிரிடையாக இருக்கிறது.

ஆ. தாவீதின் உடன்படிக்கையானது சாலொமோனில், அவனுடைய இராஜ்ஜியத்தில் நிறைவேறிவிட்டது என்று இவர்கள் எண்ணுகிறார்கள்.

**பதில் :** தாவீதின் உடன்படிக்கை சாலொமோனில் நிறைவேறியிருக்கும் என்றால், எரேமியா கூறியிருக்கிற தீர்க்கதரிசனங்கள் முரண்பாடு உடையதாகவும், மதியீனமான காரியமாகவும் தோன்றுமே (எரேமியா 33:15–17).

இ. தாவீதின் உடன்படிக்கையானது ஆவிக்குரிய நிறைவேறுதலாய் இருக்கிறது என்று இவர்கள் பின்கண்டபடி வாதாடுகிறார்கள்.

1. சிங்காசனம் என்பது பிதாவின் சிங்காசனம் (வெளி. 3:21; எபிரெயர் 8:1; 10:12). பிதாவின் சிங்காசனத்தை தாவீதின் சிங்காசனமாக வேதத்தில் ஒரு இடத்திலும் அழைக்கவில்லை.
2. வீடு என்பது விசுவாசத்தின் குடும்பம் என்று அழைப்பது (கலாத்தியர் 6:10).
3. இராஜ்ஜியம் என்பது சபை.

ஈ. இவ்விதமான கண்ணோட்டத்தினால் தாவீதுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இராஜ்ஜியமும், சந்ததியும், சபையே என்று கூறுகிறார்கள். பூமிக்குரிய இராஜ்ஜியம் இல்லை என்று முடிவாகி கிறிஸ்துவின் ஆவிக்குரிய ஆட்சிக்கு மாதிரியாக தாவீதின் ஆட்சி மாறுகிறது என்று கூறுகிறார்கள்.

## IX. தாவீதின் உடன்படிக்கையானது நிபந்தனையற்றது. அது எழுத்தின்படி நிறைவேறும் என்பதற்கான ஆதாரங்கள் :

அ. தாவீதின் உடன்படிக்கையானது 'நித்தியமானது' என்று அழைக்கப் படுகிறது (2 சாமு. 7:16; 23:5; ஏசாயா 55:3).

தேவனுடைய உண்மையிலும், வல்லமையிலும் இவ்வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதல் அமைந்திருக்கிறது.

ஆ. ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையை இது விஸ்தரிக்கிறது. <u>**குறிப்பு :**</u> சங்கீதம் 89.

1. தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு முன்பு (வசனம் 20–29) அவருடைய இராஜ்ஜியம் விலக்கப்படுவதை முன்கூட்டியே பார்க்கிறார் (வசனம் 38–45).
2. இருப்பினும், தாவீது தனக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் எழுத்தின்படி நிறைவேறும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறார் (வசனம் 46–52).
3. 'ஆனாலும்' என் கிருபையை அவனைவிட்டு விலக்கமாட்டேன் என்ற வார்த்தையை கவனிக்கவேண்டும் (வசனம் 30–34).

இ. புதிய ஏற்பாட்டில் ஏறத்தாழ 59 முறை தாவீதைக்குறித்து மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கிறது. பிதாவின் சிங்காசனத்திற்கு தாவீதின் சிங்காசனம் என்று ஒருமுறை கூட குறிப்பிடவில்லை. முடிவு மிகவும் தெளிவாக இருக்கிறது.

ஈ. யோவான் ஸ்நானகன், கிறிஸ்து, 12 அப்போஸ்தலர்கள் மற்றும் 70 சீஷர்கள் அறிவித்த இராஜ்ஜியம் உண்மையிலேயே இப்பூமிக்குரிய இராஜ்ஜியம் ஆகும்.

1. தாவீதின் இராஜ்ஜியத்தை மறுபடியும் கிறிஸ்து ஸ்தாபிப்பார் என்று யூதர்கள் எதிர்பார்த்தனர்.
2. தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட இந்த வாக்குத்தத்தம் உண்மையானதாக இல்லையென்றால், தேவனுக்குப் பயப்படுகிற ஏராளமான யூதர்கள் ஏமாற்றம் அடைந்திருக்க வேண்டும். சங்கீதம் 89:34; 132:11 தேவனுக்குப் பயப்படுகிற எந்த ஒரு யூதனும் இந்த வாக்குத்தத்தம் எழுத்தின்படி நிறைவேறும் என்று சந்தேகமில்லாமல் விசுவாசிக்கிறான்.
3. 'இராஜ்ஜியம்' தற்காலிகமாக நிராகரிக்கப்பட்டாலும் இப்பூமியில் ஸ்தாபிக்கப்படும் இராஜ்ஜியத்தைக் கிறிஸ்து ஆவலுடன் எதிர்பார்த்தார் (மத்தேயு 25:31).

உ. இந்த வாக்குத்தத்தங்கள் வரலாற்று ரீதியில் நிறைவேறவில்லை.

1. ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை இஸ்ரவேல் ஜனங்கள் முழுவதுமாக சுதந்தரித்துக் கொள்ளவில்லை.
2. சாலொமோன் இராஜ்ஜியபாரம் செய்யும் பொழுது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் முழுவதையும் ஆட்சி செய்யாமல் ஒரு குறிப்பிட்ட சில பகுதிகளை மாத்திரம் தனது ஆளுகைக்குள் வைத்திருந்தார் (1 இராஜாக்கள் 4:21).

3. சாலொமோனுக்குப்பின் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆகியும் அநேக வாக்குத்தத்தங்கள், அதாவது இஸ்ரவேல் ஜனங்கள் தேசத்தை மறுபடியும் சுதந்தரிப்பார்கள் என்பது வேதத்தில் நிறைந்து இருக்கின்றன.

ஊ. தாவீதுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமானது, அவருடைய கர்ப்பப்பிறப்பே இராஜ்ஜியத்தைச் சுதந்தரிக்கும். சிங்காசனமும், இராஜ்ஜிய மும் வாக்குத்தத்தமாகக் கொடுக்கப்பட்டபடியினால், இது கிறிஸ்துவின் மனிதத் தன்மையைக் குறிக்கிறது.

<u>**குறிப்பு :**</u> கிறிஸ்து உண்மையாகவே தாவீதின் குமாரன் (லூக்கா 1:33; ரோமர் 1:3). இந்த வாக்குத்தத்தங்கள் உண்மையாக கிறிஸ்துவில் நிறைவேறவேண்டியதாக இருக்கின்றன.

எ. இந்த வாக்குத்தத்தமானது ஆவிக்குரியவையாக மாற்றப்பட வேதத்தில் எந்த ஆதாரமும் கிடையாது.

ஏ. இந்த வாக்குத்தத்தத்தின் பகுதி நிறைவேறுதல், எதிர்காலத்தில் இவ்வாக்குத்தத்தம் முழுமையாக நிறைவேறும் என்பதைத் தெரிவிக்கிறது.

ஐ. தாவீதுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இராஜ்ஜியத்தை, புதிய ஏற்பாட்டு சபைக்கோ அல்லது கிறிஸ்துவின் ஊழியத்திற்கோ தொடர்புபடுத்தி புதிய ஏற்பாடு கூறுவதில்லை.

1. கிறிஸ்து தாவீதின் இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும்பொழுது இஸ்ரவேல் ஜனங்கள் மறுபடியும் கர்த்தரிடம் திரும்புவார்கள் (அப்போஸ்தலர் 15:14–16).
2. ஆமோஸ் 9:11,12
3. ரோமர் 11:25–27
4. 'ஆசரிப்புக்கூடாரம்' இது இஸ்ரவேல் ஜனங்களை குறிக்கக்கூடியதாய் இருக்கிறது. புறஜாதிகளிடத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை பிரித்துக்காட்டும் வகையில் இவ்வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் 15:16,17).
5. இப்பொழுது கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் இல்லை என்பது தெளிவாகிறது.

### X. முடிவுரைகள் :

அ. இப்பொழுது சபையின் காலம், இராஜ்ஜியத்தின் காலம் அல்ல.

ஆ. கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். தன் சிங்காசனத்தில் இப்பொழுது இல்லை.

இ. சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதாலும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலும் 'சபை' உருவாக்கப்படுகிறது.

ஈ. இன்றைக்கு பாலஸ்தீனா தேசத்தில் பார்க்கக்கூடிய காரியம் வரப்போகிற காரியத்திற்கு முன்னோடியாக இருக்கிறது.

உ. **கிறிஸ்துவின் வருகை :** சபைக்கு – எடுத்துக்கொள்ளப்படுதல், யூதர்களுக்கு – திரும்பவும் கூட்டிச்சேர்க்கப்படுதல், புறஜாதியாருக்கு – சமாதானத்தின் ஆட்சி.

ஊ. தேவனுடைய வார்த்தை நித்தியமானது, மாறாதது. எனவே அவருடைய வார்த்தையில் நம்பிக்கை வைக்கலாம்.

எ. கிறிஸ்து இவ்வுலகத்தில் நீதியோடு ஆட்சிசெய்வது இனி வரவேண்டிய தாகவே உள்ளது.

## இரத்தத்தினாலான உடன்படிக்கை (புதிய உடன்படிக்கை)

### I. சில அடிப்படை (சாவி) வசனங்கள்:

எரேமியா 31:31–38; 32:37–41; எசேக்கியேல் 36:26–34; 37:21–28; மத்தேயு 26:28;

1 கொரிந்தியர் 11:25; எபிரெயர் 8:8–12; 9:15; 10:16; 12:24

### II. யாருடன் இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது?

'இஸ்ரவேல் வீட்டாரோடு' இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது (எரேமியா 31:31; எபிரெயர் 8:8).

### III. புது உடன்படிக்கை என்றால் அதனுடைய பொருள் என்ன?

பழைய உடன்படிக்கைக்கு மாறான ஒரு புதிய ஒப்பந்தமே புதிய உடன்படிக்கை ஆகும்.

### IV. இந்த உடன்படிக்கை அளிக்கக்கூடிய அடிப்படைக் காரியங்கள் என்ன?

அ. இஸ்ரவேல் ஜனங்களுக்கு புதிய மனது, இருதயம் கொடுக்கப்படும் (எரேமியா 31:33).

ஆ. தேவனுடைய ஆசீர்வாதத்திற்கும், தயவிற்கும் நேராக இஸ்ரவேல் ஜனங்கள் திருப்பிச் சேர்க்கப்படுவார்கள் என்று வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது (ஓசியா 2:19–20).

இ. இஸ்ரவேலில் பாவம் மன்னிக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டிருக்கிறது (எரேமியா 31:34).

ஈ. பரிசுத்த ஆவியானவர் அவர்களில் வாசம் பண்ணுவார் என்று வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது (எசேக்கியேல் 36:27).

உ. உலகப்பொருள்களினால் இஸ்ரவேல் ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது (எசேக்கியேல் 36:33–35).

ஊ. எருசலேமில் பரிசுத்த ஸ்தலம் ஸ்தாபிக்கப்படும் என்று வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது (எசேக்கியேல் 37: 26,27).

எ. உலகத்தில் யுத்தம் ஒழிக்கப்பட்டு, சமாதானம் அருளப்படும் என்று வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது (ஏசாயா 2:4).

ஏ. இந்த உடன்படிக்கையானது கர்த்தராகிய கிறிஸ்துவின் பலிமரணத் தினாலும், அவருடைய பரிசுத்த இரத்தத்தினாலும் உத்திரவாதம் கொடுக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது (மத்தேயு 26:28; எபிரெயர் 9;11–12; 10:11–18).

## V. இந்த புதிய உடன்படிக்கையின் தன்மை என்ன?

அ. இந்த உடன்படிக்கை நிபந்தனையற்றது. தேவனுடைய சித்தத்தை அடிப்படையாகக்கொண்டது. இது முழுவதும் தேவனுடைய கிருபையே, அவரையே நோக்கவேண்டும்.

ஆ. இந்த உடன்படிக்கை எழுத்தின்படி நடைபெறுகிறது. உண்மையான மக்கள், உண்மையான நிலம், உண்மையான பாவமன்னிப்பின் வாக்குத்தத்தம், பரிசுத்தப்படுத்துதல், மறுபிறப்பு இவைகள் அனைத்தும் உண்மையான கிறிஸ்துவின் பலிமரணத்தின் அடிப்படையில் அமைந்திருக்கிறது.

இ. இந்த உடன்படிக்கை நித்தியமானது (எரேமியா 31:34; 32:40).

ஈ. இந்த உடன்படிக்கை நிபந்தனையற்றது, மாறாதது. ஆபிரகாமின் உடன்படிக்கையின் விஸ்தரிப்பாக இது இருக்கிறது.

## VI. இந்த உடன்படிக்கை நிறைவேறுவது எப்பொழுது?

**அ. இந்த உடன்படிக்கையானது சபையில் நிறைவேறக்கூடியதாய் இருக்கிறது என்று போதிப்பவர்கள் சொல்லக் கூடிய கருத்துக்கள் :**

1. இஸ்ரவேலுக்கு எதிர்காலம் கிடையாது.
2. இஸ்ரவேல் ஜனங்களுக்கு கிறிஸ்து இராஜாவாக இருக்கமாட்டார்.
3. இந்த உடன்படிக்கையை ஆவிக்குரியவைகளாக, உவமானங்களாக கருதுதல்.
4. 'சபை', 'இஸ்ரவேல்' என்று அழைக்கப்படுவதில்லை என்பதைப் பார்க்க தவறிவிட்டார்கள்.

**ஆ. சில வேதபண்டிதர்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்கள் :**

1. இஸ்ரவேல் ஜாதி மட்டுமே இந்த உடன்படிக்கையை சரியாக அறிந்து கொள்ள முடியும் (எரேமியா 31:33,34; எபிரெயர் 8:8).
2. இஸ்ரவேல் ஜனங்களோடு மட்டுமே இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.
   i) வேதவசனத்தின் மூலம் நாம் அறிந்துகொள்கிறோம்.
   ii) பழைய உடன்படிக்கைக்கு மாறாக இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. பழைய உடன்படிக்கைகூட இஸ்ரவேல் ஜனங்களுடன் மாத்திரமே ஏற்படுத்தப்பட்டது (லேவி. 26:46; ரோமர் 2:14).
   iii) புதிய உடன்படிக்கையானது இஸ்ரவேல் ஜனங்களின் தொடர்ச்சி யும், அவர்கள் திரும்பக் கூட்டி சேர்க்கப் படுதலையும் தொடர்புப்படுத்தக்கூடியதாய் இருக்கிறது (எரேமியா 32:41; எசேக்கியேல் 36:34,35).

**இ. இந்த உடன்படிக்கை நிறைவேற வேண்டியது எதிர்காலத்தில் அமைந்திருக்கிறது :**

1. பழைய ஏற்பாட்டில் இந்த உடன்படிக்கை இன்னும் நிறைவேற வேண்டியதாகவே பார்க்கப்படுகிறது.
2. நிச்சயமான வரிசைக்கிரமங்கள் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளது. முதலாவது, இஸ்ரவேல் ஜனங்கள் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். இரண்டாவது, பழைய நிலைக்கு கொண்டுவரப்படுவார்கள். மூன்றாவது, இஸ்ரவேல் ஜனங்கள் முழுவதும் மனந்திரும்புவார்கள் (எரேமியா 32:37–41).
3. இவ்விதமான வரிசைக்கிரமங்கள் வரலாற்றில் குறிக்கப்படவில்லை.
4. ஆயிரவருட அரசாட்சியில் இந்த உடன்படிக்கையை நன்கு உணர்ந்து கொள்ள முடியும் என்பதை வேத வசனங்கள் தெரிவிக்கின்றன (எசேக்கியேல் 37:24–28).

5. கிறிஸ்து மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரவேண்டும் (ரோமர் 11:26,27). இங்கே குறிக்கப்படுகிற 'உடன்படிக்கை' என்ற வார்த்தை புதிய உடன்படிக்கையை குறிக்கிறது. இந்த புதிய உடன்படிக்கையில் பாவமன்னிப்பும் அடங்கியிருக்கிறது.

## VII. கிறிஸ்துவும் புதிய உடன்படிக்கையும் :

1. கிறிஸ்து இப்பொழுது இஸ்ரவேல் ஜனங்களின் மேசியாவாக இருக்கிறார். அதே சமயத்தில் சபைக்கு ஆண்டவராகவும், இரட்சகராகவும் இருக்கிறார்.
2. புறஜாதியாருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு சபை உருவாக்கப் படுவதினாலே, இஸ்ரவேல் ஜனங்களை முழுவதும் புறக்கணித்துவிட்டார் என்று பொருள் அல்ல (அப்போஸ்தலர் 15:14–16; ரோமர் 11:25–27).
3. கர்த்தராகிய கிறிஸ்துவின் பலிமரணம் இந்த உடன்படிக்கையை முத்திரையிட்டு உறுதிப்படுத்துகிறது. இந்த உடன்படிக்கையில் பாவமன்னிப்பும் அடங்கியிருக்கிறது (எபிரெயர் 9:11–22; 10:11–18).
4. கிறிஸ்து இந்த புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கிறார் (எபிரெயர் 9:15).
5. இந்த உடன்படிக்கையை கிறிஸ்து எப்பொழுது செயல்படுத்துவார்? (அப்போஸ்தலர் 15:14–17; ரோமர் 11:26,27).

## VIII. சபையும் புதிய உடன்படிக்கையும் :

டார்பி, ஷேபர், ஸ்கோபீல்டு இவர்களின் கண்ணோட்டம் :

அ. இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இந்த புதிய உடன்படிக்கையானது இப்போதே நடைமுறையில் உள்ளது என்று வேதத்தில் ஒரு இடத்திலும் பார்க்கமுடியாது.

ஆ. மத்தியஸ்தராகிய கிறிஸ்துவோடு தொடர்பு கொள்வதால் புதிய உடன்படிக்கையில் உள்ள வாக்குத்தத்தங்களிலும், ஆசீர்வாதங்களிலும் விசுவாசிகள் பங்கு கொள்ளுகிறார்கள்.

இ. அனைத்து பாவங்களுக்காகவும் அவருடைய பலி செலுத்தப்பட்டது (எபிரெயர் 10:12).

ஈ. நமது மீட்பை பாதுகாப்பதும் அவர் சிந்திய இரத்தமே (எபிரெயர் 9:12; எபேசியர் 1:7).

உ. விசுவாசிக்கிற அனைவருக்கும் மறுபிறப்பும்,பரிசுத்த ஆவியானவரும் வாக்குத்தத்தமாக கொடுக்கப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் 1:8; எபேசியர் 5:18; யோவான் 3:3; தீத்து 3:5,6).

ஊ. சபையானது இந்த உடன்படிக்கையின் கீழ் இராமலிருந்தாலும் இந்த புதிய உடன்படிக்கையில் உள்ள ஆசீர்வாதங்களை அனுபவித்து வருகிறது.

## IX. இந்த உடன்படிக்கையில் அடங்கியுள்ள தீர்க்கதரிசனங்களின் கருத்துக்கள் :

அ. இஸ்ரவேல் ஜனங்கள் மறுபடியும் தங்களது பழையநிலைக்குக் கொண்டுவரப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, புதிய தேசமாக ஸ்தாபிக்கப்பட்டு இவர்கள் அனைவரும் மனந்திரும்பி கர்த்தரிடம் வரவேண்டும். மேலும் ஒரு தேசமாக என்றென்றைக்கும் காணப்படவேண்டும்.

ஆ. பாலஸ்தீனா மறுபடியும் கட்டப்பட்டு ஒரு தேசமாக என்றைக்கும் காணப்படவேண்டும்.

இ. கிறிஸ்து மறுபடியும் திரும்பி வந்து அவர்களின் இராஜாவாக என்றைக்கும் இருக்கவேண்டும்.

ஈ. நித்தியமான சிங்காசனம் ஸ்தாபிக்கப்படவேண்டும்.

உ. நித்தியமான இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படவேண்டும்.

ஊ. நித்தியமான இந்த உடன்படிக்கையானது பாதுகாக்கப்பட்டு நிறைவேற்றப்படவேண்டும்.

எ. நித்தியமான ஆசீர்வாதங்கள் அனுபவிக்கப்படவேண்டும்.

**குறிப்பு :** சபையின் நம்பிக்கைக்கும், இஸ்ரவேலின் நம்பிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் :

i) சபை – இரட்சிக்கப்பட்டு, எடுத்துக்கொள்ளப்படுதல்.

ii) இஸ்ரவேல் – இரட்சிக்கப்பட்டு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் கூட்டிச்சேர்க்கப்படுதல்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## யுகங்களில் தேவனுடைய திட்டம் – பெரிய, சிறிய உடன்படிக்கைகள் (தொடர்ச்சி)

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

### சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்

1. இஸ்ரவவேலருடன் பாலஸ்தீன உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது :

   a. சீனாய் மலையில்

   b. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில்

   c. பாலஸ்தீன தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்வது

2. பாலஸ்தீன உடன்படிக்கையின் முக்கியத்துவம் :

   a. நிபந்தனையற்றது

   b. 'பாலஸ்தீனம்' என்கிற பெயரை இஸ்ரவேலருக்குக் கொடுத்தது

   c. தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் அவர்களுக்கு பாலஸ்தீன தேசத்தைக் கொடுப்பார்

3. பாலஸ்தீன உடன்படிக்கையில் காணப்பட்ட எச்சரிப்பு என்ன?

   a. தேவனுக்கு அவர்கள் உண்மையற்றவர்களாக மாறும்பொழுது, அத்தேசத்திலிருந்து அவர்களைத் துரத்துவார்

   b. தேவனுக்கு அவர்கள் உண்மையற்றவர்களாக மாறும்பொழுது, அத்தேசத்திலிருந்து அவர்களை நிரந்தரமாகத் துரத்துவார்

   c. தேவன் அந்த உடன்படிக்கையை நீக்கிப்போடுவார்

4. எசேக்கியேல் 16–ம் அதிகாரம் இஸ்ரவேலர் சிதறிப்போவதை வெளிப்படுத்துகிறது :

   a. இஸ்ரவேலரை நிரந்தரமாக நிராகரித்தல்

   b. நிரந்தர நிராகரிப்பல்ல

   c. இஸ்ரவேல் கிறிஸ்துவை நிராகரிப்பதற்கான படம்

5. 2 சாமுவேல் 7:8–17 வசனங்கள், விவரிப்பது :

   a. பாலஸ்தீன உடன்படிக்கை b. தாவீதுடன் உடன்படிக்கை c. இஸ்ரவேலருடன் உடன்படிக்கை

6. தாவீதுடன் உடன்படிக்கை யாருடன் ஏற்படுத்தப்பட்டது?

   a. தாவீதும் அவனது குடும்பமும் b. இஸ்ரவேல் தேசம் c. தாவீதின் சந்ததி

7. தாவீதுடன் உடன்படிக்கையில் உள்ள சிறப்பான வாக்குத்தத்தம்

   a. தாவீதின் குடும்பம் இராமல் போவதில்லை

   b. தாவீதும் அவனது குடும்பமும் இஸ்ரவேலை அநேக நூற்றாண்டுகள் ஆளுகை செய்யும்

   c. தேவனுக்குத் தொடர்ந்து கீழ்ப்படிந்தால் தாவீதின் குடும்பம் தொடர்ந்து ஆளுகை செய்யும்

8. தாவீதின் குடும்பம் என்றால் அதனின் பொருள் :

   a. விசுவாச குடும்பத்தார் b. சபை c. தாவீதும் அவனது சந்ததியும்

9. தாவீதுடன் உடன்படிக்கை நிறைவேறுதலை நிராகரிப்பது

   a. கிறிஸ்துவின் வருகை ஆயிர வருடஅரசாட்சிக்கு முன்பு இருக்கும் என்று நம்புகிறவர்கள்

b. ஆயிர வருட அரசாட்சி இல்லை என்று நம்புகிறவர்கள்

c. கிறிஸ்துயவின் வருகை ஆயிர வருட அரசாட்சிக்கு பின்பு இருக்கும் என்று நம்புகிறவர்கள்

10. தாவீதுடன் உடன்படிக்கை என்றால் என்ன?

a. நிபந்தனையுள்ளது

b. நிபந்தனையற்றது

c. பகுதி நிபந்தனையுள்ளது, பகுதி நிபந்தனையற்றது

11. தாவீதைக் குறித்துப் பேசும் வசனங்கள் 59 புதிய ஏற்பாட்டில் உள்ளது. பிதாவின் சிங்காசனத்திற்குத் தொடர்பு படுத்தி பேசப்படவில்லை. இது எதைக் காண்பிக்கிறது.

a. யோவானும் மற்ற எழுபதுபேரும் இப்பூமியின் இராஜ்ஜியமாகும். இதைத்தான் இயேசுவானவர் கொடுத்தார்

b. தாவீதின் குடும்பம் சபையாகும்

c. இயேசுவானவர் சொல்லிய ராஜ்ஜியம் ஆவிக்குரிய ராஜ்ஜியமாகும்

12. புதிய உடன்படிக்கைக்கான வசனம் :

a. 2 சாமுவேல் 7:8–17 b. உபாகமம் 30:1–10 c. எரேமியா 31:32

13. புதிய உடன்படிக்கையின் தன்மை :

a. நிபந்தனையற்றதும், நிஜமானதும், நித்தியமானதும்

b. நிபந்தனையுள்ளதும், நிஜமானதும், நித்தியமானதும்

c. நிபந்தனையுள்ளதும், ஆவிக்குரியதும், நித்தியமானதும்

14. புதிய உடன்படிக்கை எப்பொழுது நிறைவேறும்?

a. இது சபையில் நிறைவேறிற்று

b. இஸ்ரவேல் மக்களோடு இது நிறைவேறும்

c. ஆயிரவருட அரசாட்சியில் நிறைவேறும்

15. புறஜாதிகளுக்கு சுவிசேஷம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதன் பொருள் :

a. தேவன் இஸ்ரவேலை மறந்து விட்டார்

b. யூதர்களுக்கும் பறஜாதிகளுக்கும் சுவிசேஷம் பொருந்தும்

c. கிறிஸ்துவானவர் புறஜாதியினருக்கு மட்டும் மத்தியஸ்தர் யூதர்களுக்குத் தேவாலயம் இருக்கிறது.

---

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

பதிவு எண் : ____________________

முழு பெயர் : ____________________

முகவரி : ____________________

____________________